Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, HARUR

| | |
|---|---|
| Calendar<br>Misscellancous<br>Preliminary Register<br>Sessions | **Case No. STC 135/2020** |
| Deposition of **PW1** | Prosecution<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | **திரு.சின்னராமன்** |
| Father's Name/Husband Name | : | **த/பெ. ராமன்** |
| Village | : | **தோல்தூக்கி** |
| Taluk | : | **பாப்பிரெட்டிப்பட்டி** |
| District | : | **தருமபுரி** |
| Caste | : | |
| Calling | : | **PW1** |
| Religion | : | **இந்து** |
| Age | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20th** Day of **December 2021.**

**திரு.சின்னராமன்**

**சத்தியபிரமாண வாக்குமூலம்**

நான் தோல்தூக்கி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். நான் எதிரிக்கு எதிராக காசோலை மோசடி வழக்கு தொடர்ந்துள்ளேன். மேற்படி புகார் மனுவின் சங்கதிகளை நிரூபிக்கும்

பொருட்டு எழுத்துப்பூர்வமான வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் எதிரிக்கு வழங்கிய காசோலையின் அசல் (எண். 233441) புசாஆ 1 ஆகும். மேற்படி காசோலை பணம் இல்லாமல் திரும்பியதற்கான வங்கியாளர் குறிப்பு புசாஆ 2 ஆகும். மேற்படி காசோலை பணம் இல்லாமல் திரும்பியதால் அனுப்பிய சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் புசாஆ 3 ஆகும். மேற்படி சட்ட அறிவிப்பு எதிரியின் வீடு பூட்டியிருக்கிறது என்ற காரணத்தால் திரும்பி வந்ததற்கான அஞ்சலக உறை புசாஆ 4 ஆகும். அதற்கான இணையவழி குறிப்பு புகார்தாரர் தரப்பு சம்மதத்துடன் புசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**